(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **67**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2016 மே 05, வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ திலங்க சுமதிபால,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சர்

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஜோன் அமரதுங்க,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரும் காணி அமைச்சரும்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற் கோலாசானும்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ மனோ கணேசன்,** தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர்

**கௌரவ தயாசிறி ஜயசேகர,** விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ துமிந்த திசாநாயக்க,** கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க,** சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. நாவின்ன,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பைஸர் முஸ்தபா,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,** அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ,** நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்

**கௌரவ சந்திம வீரக்கொடி,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ மலிக் சமரவிக்ரம,** அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

**கௌரவ மஹிந்த சமரசிங்க,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சர்

**கௌரவ ரஞ்சித் சியம்பலாபிடிய,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்

**கௌரவ விஜித் விஜயமுனி சொய்சா,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்,** சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ அப்துல் ஹலீம்,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,** பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க,** காணி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. டி. பிரேமதாச,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பாலித ரங்கே பண்டார,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வீ.எஸ். இராதாகிருஷ்ணன்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரவீந்திர சமரவீர,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் செனெவிரத்ன,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த சேனாநாயக்க,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்

**கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,** புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி,** தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ துனேஷ் கன்கந்த,** அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் வசந்த பெரேரா,** பெருந்தோட்ட கைத்தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ தாராநாத் பஸ்நாயக்க,** தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்,** கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்,** விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ சிசிர குமார அபேசேகர**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ திலும் அமுனுகம**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே**

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி**

**கௌரவ வேலு குமார்**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ சிறிபால கமலத்**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ பந்துல குணவர்தன**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ டி.வீ. சானக**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ மலித் ஜயதிலக**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ லக்கி ஜயவர்தன**

**கௌரவ பிரேமலால் ஜயசேகர**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ க. துரைரெட்ணசிங்கம்**

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்**

**கௌரவ எம்.எஸ். தௌபீக்**

**கௌரவ சிறினால் டி மெல்**

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ விமலவீர திசாநாயக்க**

**கௌரவ வீரகுமார திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ முஹமட் நவவி**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ புத்திக பத்திறண**

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ பந்துல லால் பண்டாரிகொட**

**கௌரவ தாரக்க பாலசூரிய**

**கௌரவ விஜித பேருகொட**

**கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ கே. காதர் மஸ்தான்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ அப்துல்லா மஹரூப்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

**கௌரவ திலக் மாரபன**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரன**

**கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்**

**கௌரவ பிமல் ரத்நாயக்க**

**கௌரவ சீ. பீ. ரத்நாயக்க**

**கௌரவ லொஹான் ரத்வத்தே**

**கௌரவ பிரசன்ன ரணதுங்க**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ ரொசான் ரணசிங்க**

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ நாமல் ராஜபக்ஷ**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ (திருமதி) பவித்திராதேவி வன்னிஆரச்சி**

**கௌரவ விதுர விக்கிரமநாயக்க**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன**

**கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன**

**கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ கஞ்சன விஜேசேகர**

**கௌரவ தேனுக விதானகமகே**

**கௌரவ ச. வியாழேந்திரன்**

**கௌரவ விமல் வீரவங்ச**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ இராஜவரோதியம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ ஈ. சரவணபவன்**

**கௌரவ எம்.எச்.எம். சல்மான்**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ (டாக்டர்) சி. சிவமோகன்**

**கௌரவ சிவசக்தி ஆனந்தன்**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ அலி ஸாஹிர் மௌலானா செயிட்**

**கௌரவ மாவை சோ. சேனாதிராசா**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

**கௌரவ கனக ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சபாநாயகரின் அறிவித்தல்கள்:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தார்,— "2016 மே மாதம் 03 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற சபா மண்டபத்தினுள் இடம்பெற்ற கவலைக்குரிய சம்பவம் தொடர்பாக அறிவித்தலொன்றை விடுக்க விரும்புகின்றேன்.

இவ்வாறான விரும்பத்தகாத சம்பவங்கள் காரணமாக பாராளுமன்றத்தின் உன்னத நிலைமைக்கும் இச்சபையின் கௌரவத்திற்கும் பாதிப்பு ஏற்படுவதுடன், பொது மக்களின் கடும் அவமதிப்புக்கும் எமது பாராளுமன்றம் உள்ளாகும் என்பதில் சந்தேகமில்லை.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் பாராளுமன்றத்துக்கும், கௌரவ உறுப்பினர்களின் பாதுகாப்புக்கும் பாரிய அச்சுறுத்தல் ஏற்படுவதன் காரணமாக, எதிர்காலத்தில் எவ்வகையிலும் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படாதிருப்பதற்கு பொறுப்புடன் செயற்படுவது மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் எம் அனைவரினதும் கடமையும், பொறுப்புமாகும் என்பதை நான் வலியுறுத்துகின்றேன்.

இச்சபைக்கு நான் நேற்றுப் பிற்பகல் அறிவித்ததற்கு அமைய, பிரதி சபாநாயகர், கௌரவ திலங்க சுமதிபால அவர்கள் மற்றும் குழுக்களின் பிரதித் தவிசாளர் கௌரவ செல்வம் அடைக்கலநாதன் அவர்களினால் இச் சம்பவம் தொடர்பாக ஆராயப்பட்டு என்னிடம் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அத்தகைய அறிக்கையின் பிரதியொன்றை அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கிடைக்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

இத்தகைய சம்பவங்கள் மீண்டும் ஏற்படாதிருப்பதனை உறுதிப்படுத்துவற்கும், இச்சபையில் நீண்ட காலமாக இருந்து வருகின்ற உன்னதமான மரபுகளைப் பேணிப் பாதுகாப்பதற்கும், பாராளுமன்றத்தினதும் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும், சபையின் ஒழுக்கத்தைப் பேணி வருவதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பது தொடர்பாக சபையின் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன்.

குறித்த அவதானிப்புக்களின் பிரகாரம் இச்சம்பவம் ஆரம்பமாவதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது, எதிர்க் கட்சியில் அமர்ந்திருந்த சில உறுப்பினர்கள் சபை நடுவில் பிரவேசித்து கூச்சலிட்டு பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தமையும், அதன் பின்னர் ஆளும் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்களும் சபை நடுவில் பிரவேசித்தமையின் மூலம் ஏற்பட்ட குழப்ப நிலைமையும் காரணமாக மேற்படி கவலைக்குரிய பாரமதூரமான சம்பவம் ஏற்பட்டது என்பதனை குறிப்பிட விரும்புகின்றேன்.

இவ்வனைத்துச் சம்பவங்களுடனும் தொடர்புடைய உறுப்பினர்களின் செயற்பாட்டினை நான் வன்மையாகக் கண்டிப்பதோடு இதனகத்துப் பின்னர் அத்தகைய சம்பவங்களை மேற்கொண்டு இச்சீருயர் சபையின் நன்மதிப்புக்கு களங்கம் ஏற்படும் வகையில் செயற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும், பாராளுமன்றத்தின் மரபுகளையும் சிறப்புரிமைகளையும் பாதுகாக்குமாறும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

இச்சம்பவத்திற்கு பொறுப்புக்கூற வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையே ஒழுக்கத்திற்கு மிகவும் முரணான வகையில் நடந்துகொண்டுள்ளார்களென அவதானிக்கப்பட்டுள்ள கௌரவ பாலித குமார தெவரப்பெரும மற்றும் கௌரவ பிரசன்ன ரணவீர ஆகிய உறுப்பினர்கள் சம்பந்தமாக நிலையியற் கட்டளை 74(2) உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 72(1) பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் கீழ் மேற்படி பாராளுமன்ற உறுப்பினர்களின் பாராளுமன்ற சேவையை ஒரு வார காலத்திற்கு இடைநிறுத்தி வைப்பதற்கு ஏதுவான பிரேரணையை இச்சபையில் சமர்ப்பிக்குமாறு சபை முதல்வரிடம் நான் கேட்டுக்கொள்கின்றேன்.''

**2. பாராளுமன்றச் சேவையை தற்காலிகமாக இடைநிறுத்தல்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— அதற்கிணங்க, 2016 மே 03 ஆம் திகதி சபையில் மிகவும் ஒழுக்கமற்ற முறையில் நடந்துகொண்டமை தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பாலித குமார தெவரப்பெருமவின் பாராளுமன்ற சேவையை ஒரு வார காலத்திற்கு தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கான பிரேரணையை பாராளுமன்ற நிலையியற் கட்டளை 74 (2) உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 72 (1) நிலையியற் கட்டளையின் பிரகாரம் சபாநாயகரினால் பெயர் குறிப்பிட்டதன் பின்னர், கௌரவ பாலித குமார தெவரப்பெருமவின் பாராளுமன்ற சேவையை ஒரு வாரத்திற்கு தற்காலிகமாக இடைநிறுத்தப்படுதல் வேண்டுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. பாராளுமன்றச் சேவையை தற்காலிகமாக இடைநிறுத்தல்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— அதற்கிணங்க, 2016 மே 03 ஆம் திகதி சபையில் மிகவும் ஒழுக்கமற்ற முறையில் நடந்துகொண்டமை தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பிரசன்ன ரணவீரவின் பாராளுமன்ற சேவையை ஒரு வார காலத்திற்கு தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கான பிரேரணையை பாராளுமன்ற நிலையியற் கட்டளை 74 (2) உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 72 (1) நிலையியற் கட்டளையின் பிரகாரம் சபாநாயகரினால் பெயர் குறிப்பிட்டதன் பின்னர், கௌரவ பிரசன்ன ரணவீரவின் பாராளுமன்ற சேவையை ஒரு வாரத்திற்கு தற்காலிகமாக இடைநிறுத்தப்படுதல் வேண்டுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**4. பத்திரங்கள் சமர்ப்பணம்:** (1) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2014 ஆம் ஆண்டுக்கான இலங்கை கொள்கை ஆய்வு நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து உரிய மேற்பார்வைக் குழுவிற்கு விடப்படுதல் வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,

(i) 2013 ஆம் ஆண்டுக்கான இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் ஆண்டறிக்கை; மற்றும்

(ii) 2012 ஆம் ஆண்டுக்கான தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆண்டு அறிக்கை;

ஆகியவற்றைச் சமர்ப்பித்து உரிய மேற்பார்வைக் குழுவிற்கு விடப்படுதல் வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படிப் அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(4) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2013 ஆம் ஆண்டுக்கான இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து உரிய மேற்பார்வைக் குழுவிற்கு விடப்படுதல் வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,

(i) 2014 ஆண்டுக்கான தேசிய சேமிப்பு வங்கியின் ஆண்டறிக்கை;

(ii) 2014 ஆம் ஆண்டுக்கான இலங்கை வங்கியின் ஆண்டறிக்கைகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து உரிய மேற்பார்வைக் குழுவிற்கு விடப்படுதல் வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2013 ஆண்டுக்கான இலங்கை நீதிபதிகள் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்பித்து உரிய மேற்பார்வைக் குழுவிற்கு விடப்படுதல் வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. மனுக்கள்:**

(1) (i) தலவத்தேகெதர, படகம்மனவில் வதியும் திரு. ஆர்.எம். சந்திரசிரி ராஜபக்ஷவினது 2015.09.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) தலாத்துஓய, மஹ/ஹேவாஹெட்ட மத்திய வித்தியாலயத்தில் பணிபுரியும் திரு. டப்ளியூ.எம்.ஏ. விஜேசுந்தரவினது 2015.10.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ அகில விராஜ் காரியவசம் சமர்ப்பித்தார்.

(2) (i) பள்ளம, வெந்தகடுவில் வதியும் திரு. பி.பீ. நிசாந்த பிரியதர்சன த சில்வாவினது 2016.01.17 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) கடவத, இஹல கரகஹமுன, ராஜசிங்க மாவத்தை, 348/30 இல் வதியும் திரு, யூ.ஜி. காமினி ரத்னசிரியினது 2016.02.14 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**6. சட்டமூலம் கொண்டுவர அனுமதி**: ""பீ.வை. துடாவே சமூக நலனோம்புகை மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" என்னும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம பிரேரித்தார். கௌரவ சந்திரசிறி கஜதீர அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

47 (5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**7. குறைநிரப்பும் தொகை - தலைப்பு 240 - நிகழ்ச்சித் திட்டம் 2** :நிதி அமைச்சர் சார்பாக நிதி இராஜாங்க அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— †இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினால் பெறப்பட்ட கடன் தொகையிலிருந்து 2016 சனவரி மாதம் 1 ஆம் திகதியுடன் ஆரம்பமாகி 2016 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் நிதியாண்டின் பயன்பாட்டிற்காக ஐம்பத்தைந்து மில்லியன் ரூபாவை (ரூபா. 55,000,000) விஞ்சாத தொகையொன்றினை அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு தயார்படுத்திக்கொள்ளல் வேண்டுமாக.

சேவைகள் கீழ் காண் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

(அ) 2015 நிதியாண்டின் நானாவித நிதியிலிருந்து 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 மற்றும் 11 ஆம் இலக்க முற்பணக் கணக்குகளைத் தீர்த்தல்.

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு | 240 | - | தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் |
| நிகழ்ச்சித் திட்டம் | 02 | - | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் |
| கருத்திட்டம் | 03 | - | கணக்கீட்டு உதவி |
| | | | மொத்தச் செலவினம் = ரூபா **55,000,000** |
| | | | (ஐம்பத்தைந்து மில்லியன் ரூபா மட்டும்) |

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2016 மார்ச்சு மாதம் 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2016 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(மு.ப. 11.38 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 1.30 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்குவாராக" என உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.05 மணிக்கு லக்கி ஜயவர்தன தலைமை தாங்கினார்)

“கௌரவ வேலு குமார் தலைமை தாங்குவாராக” என மீன்பிடித் தொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.00 மணிக்கு கௌரவ வேலு குமார் தலைமை தாங்கினார்.)

“கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்குவாராக” என புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப.4.46 மணிக்கு கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 43 இன் கீழ் சட்டமூலத்திற்கு சார்பாக 33 மற்றும் எதிராக 31 என வாக்களித்து நிறைவேற்றப்பட்டது.

**8. ஒத்திவைப்பு** : “இப் பாராளுமன்றம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக” என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பி.ப. 5.59 மணிக்கு 2016 மார்ச்சு மாதம் 08 ஆம் திகதிய சபைத் தீர்மானத்திற்கு ஏற்ப 2016 மே மாதம் 06 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணி வரை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.